தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 7, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 20, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***30248— திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் அளவுக்கு மக்கள்தொகை இல்லாத காரணத்தாலும், பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்குத் தேவையான மிகுதியான நிதி மற்றும் செயல்படுத்தத் தேவைப்படும் காலம் ஆகியவற்றினைக் கருத்தில்கொண்டும், பேராவூரணி பேரூராட்சிப் பகுதியில் உருவாகும் கழிவுநீரின் அளவினைக் கருத்தில்கொண்டும், சிறிய பேரூராட்சிகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் அமைக்கலாமா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தேர்வுநிலைப் பேரூராட்சி சுமார் 35,000 மக்கள் தொகையைக் கொண்ட, 18 வார்டுகளைக் கொண்ட, 18½ கிலோ மீட்டர் சுற்றளவைக் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். எனவே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் மறுபரிசீலனை செய்ய தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி பேரூராட்சியில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள்தொகை 22,084 ஆகவும், தற்போது சுமார் 24,450 ஆகவும் உள்ளது. தற்போது, கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்துடன் இணைத்து, திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தையும் செயல்படுத்திட "தூய்மை இந்தியா" 2.0 திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீடு பெற வழிவகை உள்ளது. எனவே, பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்துடன் இணைத்து, திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தையும் செயல்படுத்துதல் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேராவூரணி தேர்வுநிலை பேரூராட்சி 10,000 வீடுகளையும், 2,000 கடைகளையும் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். இந்தப் பேரூராட்சியை, நகராட்சியாக மாற்றித்தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 20,000 மக்கள்தொகை கொண்ட ஊரணிபுரம் வெட்டுவாக்கோட்டையையும், திருச்சிற்றம்பலத்தையும் பேரூராட்சியாக மாற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களை தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 490 பேரூராட்சிகளில், இதுவரை ஒரத்தநாடு, வல்லம், வேளாங்கண்ணி, பெருந்துறை, S. கண்ணனூர், மண்ணச்சநல்லூர், பழனிச்செட்டிப்பட்டி, மேலசொக்கநாதபுரம், திருமழிசை மற்றும் மாமல்லபுரம் ஆகிய 10 பேரூராட்சிகளில் மட்டும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்போரூர், திருப்பெரும்புதூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மக்கள்தொகையின் அடிப்படையில்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருகிலிருக்கின்ற ஊர்களை நகராட்சியாக, பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார். குறிப்பாக, ஓர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்துவதற்கு, அங்கிருக்கிற மக்கள் விரும்புவதில்லை. காரணம், பேரூராட்சியாகிவிட்ட காரணத்தால், 100 நாள் வேலைத் திட்டம் அவர்களுக்கு வராது என்ற காரணத்தால் அவர்கள் அதனை விரும்புவது இல்லை. அப்படி இருந்தாலும்கூட, 24-10-2024-க்குப் பிறகுதான் அதைப்பற்றி யோசனை செய்ய முடியும். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***12044— திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வால்பாறை தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், வால்பாறை தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம்.*

அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை திராவிடர் உடமையடா,
ஆறிலும் சாவு நூறிலும் சாவு,
எங்கள் தாயகம் மட்டுமல்ல,